ஸ்ரீ தந்வந்தரயே நம :

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை


பரிதாபி
மார்கழி

January
1973





தொகுதி 35
பகுதி 1

Vol. 35
No 1



ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.



வருஷச் சந்தா
ரூ. 5/-



பத்திரிகையின் வளர்ச்சி ... 1

இந்திய வைத்தியத் துறையில் ஆராய்ச்சி ... 3

காமலையில் ச்வாஸகாஸத்திலும் தேவைப்படும் ஔஷத யோகங்கள் ... 7

கிரஹணீ தொடர்ச்சி ... 13



Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய
# ஆர்ய வைத்தியசாலா
## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ. 27
(ஆபீஸ்) போன் நெ. 61
மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேலஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும் எமது தலைமை வைதயரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

**ஸௌபாக்கிய ரஸாயனம்**

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்,

300 கிராம் பாட்டில் ரூ. 5.

**பயஸ்யா**

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5-50

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

# M|s. Kalia Brothers (Regd.)

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram : KALIA**

Phone : **Office - 3232**
**Resi. - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

# கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி : **KALIA**

போன் : ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : " அம்ருதம் "     P, B. No. 1382.     போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி
## (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD. AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்**

எங்களுடைய கிளைகள் :

| | | |
|---|---|---|
| 1 | 23-B, பூஸா ரோடு, புது டில்லி-5 | போன் : 585687 |
| 2. | மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞும்பலம், எர்ணாகுளம், கொச்சின்-16 | ,, 32336 |
| 5. | பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6 | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி பொன்னானி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1. | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | 33758 |
| 12. | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2 | 842 |
| 14. | No 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | 31 |
| 15. | ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1 | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

# வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

**விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3–75**

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

**அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,**

**சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.**

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].




ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| தொகுதி 35 | பரிதாபி மார்கழி | பகுதி 1 |
| Vol. 35 | 1973 ஜனவரி | No. 1 |


श्री धन्वन्तरये नमः

## பத்திரிகையின் வளர்ச்சி

விஞ்ஞானங்கள் பல துறைகளில் வளர்ச்சி பெறுவதற்கும், பெற்றுள்ள வளர்ச்சியை அறிவாளிகளிடையே வழங்கிக் கருத்துக்களை பரிமாறிக்கொள்வதன் மூலம் திடப்படுத்திக் கொள்ளவும் இன்று பத்திரிகை பெருந்தொண்டாற்றி வருகிறது. நேரிடையாக அறிவாளிகள் கலந்து தம் தமது ஆராய்ச்சி முடிவுகளைப் பற்றி விவாதித்து அறிவை வளர்த்துக் கொள்வது மிகவும் உயர்ந்த வழி. இதற்கு பூர்வாங்கமாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், நேரிடை விவாதம் செய்ய முடியாவிடத்து எழுத்து மூலம் விவாதித்துக் கொள்ளவும் பத்திரிகை அருந் துணையாகிறது. ஆக வளரும் பத்திரிகை வாயிலாக விஞ்ஞான வளர்ச்சியையும் அளவிட முடியும். அதனால் தான் பத்திரிகைகள் நாட்டின் வளர்ச்சியில் மிகவும் முக்யமாகக் கருதப்படுகின்றன.

வைத்திய சந்திரிகை ஆயுர்வேதத்தின் வளர்ச்சியைப் பிரதி பலிப்பதாக அமைய வேண்டுமென்ற லக்ஷ்யத்துடன் நடத்தப் பட்டு வருவது வாசகர்கள் அறிந்த விஷயம். பத்திரிகையின் ஆசிரியர் குழு இதற்கான பொறுப்பு முழுவதையும் ஏற்றுக்

கொண்டிருக்கிறது. ஆனால் சமூகத்தின் வளர்ச்சியைப் பிரதி பலிக்கும் அளவில் தனது தொண்டு பரிமளிக்க வாசகர்களான வைத்ய நண்பர்களிடமிருந்து பல துறைகளில் இது உதவியை எதிர்பார்த்து நிற்கிறது. அவ்வுதவி எவ்விதத்தில் இருந்தால் நல்ல தென்பதை ஒருவாறு கீழே கோடி காட்டித் தர முயல் கிறோம்.

1. ஆயுர்வேத வழியில் அம்மை, காலரா, சொரி, சிரங்கு, பிரவாஹிகை, ஸந்நிபாத ஜ்வரங்கள் முதலிய பல்வேறு தொத்து நோய்கள், காலமாறுபாட்டால் சீதோஷ்ணஸ்திதி மாறுபாட்டால் பரவலாக ஏற்படும் நோய்கள் முதலியவைகளில் நம் முன்னோர் களும் நாமும் கையாண்டு வரும் தடுப்பு உபாயங்களும், அவைகளைப் பற்றிய யுக்தி பூர்வகமான விவரணங்களும்.

2 ஆங்காங்கு விசேஷமாக அதிக அளவில் கிடைக்கும் மூலிகைகள், வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகுபவை, ஏற்றுமதியின் அளவு, அவை நம் நாட்டினரால் எந்த வியாதியில் விசேஷமாக உபயோகப்படுத்தப் படுகின்றது, என்பது முதலிய விவரங்கள்.

3. ஒரே வியாதியில் பல்வேறு மருந்துகளிருந்தும் தம் தம் தேசத்தின் — தமிழ்நாட்டின் பல்வேறு பாகங்களின் சீதோஷ்ண மாறுபாடு முதலிய காரணத்தால் சில மருந்துகள் விசேஷ பலனளிக்காதிருப்பதும், சில மருந்துகள் நல்ல குணமளிப்பதும் கண்டு அதன் யுக்தி விவரணம்.

4. ஆங்காங்கு தொத்து நோயாகவும், காலமாறுபாட்டால் (Seasonal) ஏற்படும் நோயாகவும் ஏற்படும் வியாதிகள் - அதற்கு சிகித்ஸை முறைகளில் தம் தம் அனுபவம் பற்றிய குறிப்பு.

5. வேறு முறை வைத்யர்களின் சிகித்ஸை விசேஷ பயனளிக்காதிருக்கும் போது ஆயுர்வேத வழியில் குணமாகும் நோய்களின் விபரம்.

இது முதலான பல்வேறு விஷயங்களில் உண்மைத் தத்துவ விளக்கம் கொடுக்கக் கூடிய விபரங்களை அவ்வப்போது வைத்யர்கள் சந்திரிகையின் உபயோகத்திற்குத் தந்து உதவினால் அதைத் தொகுத்து நாட்டில் நமது வைத்ய வளர்ச்சியின் நிலையை மக்களுக்கும் வைத்யர்களுக்கும் அரசாங்கத்திற்கும் எளிதில் புரிய வைக்க முடியும். தயைசெய்து இவ்விஷயத்தில் ஒவ்வொரு வைத்ய நண்பரும் இதைத் தமது சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய முக்ய கடமையாக நினைத்து உதவுமாறு சந்திரிகை கோரி நிற்கின்றது.

# இந்திய வைத்தியத்துறையில் ஆராய்ச்சி

—:( எஸ். வி. ரா. ):—

இது விஞ்ஞான யுகம். ஆராய்ச்சி யுகம் என்றும் கூற இடமுண்டு. மனித இனம் விஞ்ஞானத்திடம் நெருங்க நெருங்க, விஞ்ஞானம் தனது என்றுமழியாப் புதுமையைக்காட்டி மனிதனைத் தன் அடிமையாக்கிக்கொண்டே வருகிறது. ஆனால் மனிதன் விஞ்ஞானத்தைத் தனக்கு அடிமையாக்கிக்கொண்டு விட்டதாகப் பெருமைகொள்கிறான். சென்ற இருநூறாண்டுகளில் விஞ்ஞானத்துறையில் அறிஞர்கள் இயற்றிய பணி இன்று மனிதனை ஸர்வ வல்லமை பொருந்தியவனாக்க உதவியுள்ளது. விஞ்ஞானத்தின் ஒவ்வொரு துறையிலும் நிகழும் ஆராய்ச்சிகளின் முடிவுகள் பிரமிப்பைத் தருகின்றன. ஆகவே ஆராச்சி ஆராய்ச்சி என்றே இன்றைய அறிவாளி ஒவ்வொருவனும் பெருந்தாகம் கொண்டிருக்கிறான். இந்தத்தாகம் ஆயுர்வேதத்தைச் சார்ந்தவர்களையும் பற்றி வருகிறது. அதன் பயன் நாட்டின் பல்வேறு மூலைகளிலும் ஆயுர்வேத ஆராய்ச்சிக் கழகங்கள் நிறுவப்பெற்று நடைபெற்று வருகிறது. அந்த அளவில் நாமும் இந்த ஆராய்ச்சி ஆராய்ச்சிப் பணிகளை வரவேற்போமாக.

ஆராய்ச்சி எதற்கு? நமக்குத்தெரிந்துள்ள உண்மைகளை உண்மையெனவே நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். எனினும் மனிதனின் பகுத்தறிவு அவைகளின் உண்மைத்தன்மையைப் பரீக்ஷை செய்து பார்க்கத் தூண்டுகிறது. இந்தப் பகுத்தறிவு உண்மையின் உண்மைத்தன்மையைச் சரியான வழியில் அறிய உதவுகிறது. வெறும் மூடநம்பிக்கையாலும் அறிவின்மையாலும் உண்மையை மாறாகப் புரிந்துகொண்டு செயல்படும் தவற்றைத் திருத்த உதவுகின்றது. தெரிந்ததைக்கொண்டு தெரியாததை அறிய வழி வகுத்துத் தருகின்றது. நமக்குக் கிடைக்கும் இயற்கைப் பொருளுக்குச் சமமான குணமுள்ள செயற்கைப் பொருளைச் செய்யவும் வழி வகுக்கிறது. நாம் அறிந்து கொண்டவை அனைத்தும் சரியானவை என்று அறிவதால் ஏற்படும் ஆனந்தத்தை அனுபவிக்கச் செய்கிறது. ஆகவே இந்த ஆராய்ச்சி நல்லதொரு பலனைத்தான் தருகிறது.

ஆயுர்வேதத்தைக் கண்டறிந்துத் தமது நூல்கள் மூலம் நமக்கு ஆயுர்வேதத்தை அறிமுகப்படுத்தியுள்ள சரகர், ஸுச்ருதர்

முதலிய முன்னோர்களின் வாக்கில் – ஆயுர்வேத வழிகளில் – நமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை – அவை முக்காலத்திலும் ஸத்யமே என்ற திடநம்பிக்கை உள்ளது. எனினும் உலக மெங்கிலும் பரவியுள்ள பகுத்தறிவுத் தீ நம்மிடமும் பரவி அவைகள் உண்மையானவையா என்று பரீக்ஷித்துப்பார்க்கத் தூண்டுகிறது. ஆகவே இந்த ஆராய்ச்சியால் நாம் கண்டறிந் தவை உண்மை என்ற நம்பிக்கை நமக்கு வலுப்படும். குரு சிஷ்ய பரம்பரையில் வந்த வித்யையானதால் எங்காவது தவறு ஏற்பட்டு நம் வரை வந்துள்ள ஆயுர்வேத முறை அறிவில் ஏதேனும் தவறிருந்தாலும் அவைகளை நாம் திருத்திக்கொள்ளக் கூடும். ஆயுர்வேதம் எழுதிய மகர்ஷிகள் கண்டறிந்த உண்மை களில் சில நம் பழக்கத்தில் இல்லாதவை. அவைகளைப்பற்றிய அறிவைப்பெற – தெரிந்ததைக்கொண்டு தெரியாததை அறிய இது பயன்படும்.

ஆயுர்வேதம் வளர்ந்து நம் நாடெங்கிலும் பரவி வெளி நாட்டிலும் பரவ ஆரம்பித்தால் தற்போது கிடைக்கும் நெல்லிக் காய்களும் வில்வவேரும் ஏனைய சரக்குகளும் தேவைக்குப் போத மாட்டா. அப்போது அதே குணத்துடனுள்ள செயற்கைப் பொருளைச் செய்யவும் மாற்றுப் பொருளைக் கண்டுபிடிக்கவும் இவ் வாராய்ச்சி பயன்படும். ஆகவே ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி அவசியம் என்பது புரிகிறது ஆயுர்வேதத்தைப்போல வேறு மருத்துவ விஞ்ஞானங்கள் இன்று உலகில் உள்ளன. அவை யனைத்தும் விஞ்ஞானத்தின் அடிப்படையில் ஆராய்ச்சியின் பயனாகத் தினமும் வளர்ந்து திடம் பெற்றுக்கொண்டே வருகின் றன. ஆயுர்வேதத்தின் நிலை அப்படி இல்லை. ஆகவே மற்ற மருத்துவ முறைகளின் வளர்ச்சிக்குப் பயன்படும் வழிகளை ஆயுர்வேதத்திற்கும் பயன்படுத்திக்கொள்வதுதான் விவேகம். ஆயுர்வேதம் விஞ்ஞான அடிப்படையிலுள்ளதா என்பதையும் விளக்க இது பயன்படும். ஆகவே ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி மிகவும் விரும்பத்தக்கது.

ஆராய்ச்சி தேவை என்று ஏற்பட்டால் அதை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று யோசிக்க வேண்டும். மற்ற மருத்துவத்துறைகளில் எப்படி ஆராய்ச்சி செய்யப் படுகிறதோ, எந்த வழியில் செய்யப்படுகிறதோ அதை அப்படியே பின்பற்றுவது சரியா என்பதைக்கவனிக்க வேண்டும். நவீன விஞ்ஞான அடிப்படையில் வளர்ந்துவரும் அலோபதி முறை தனித்து வளரும் விஞ்ஞான மல்ல. அதற்குப் பக்கத் துணையாக நிற்கும் பௌதிகம், ரஸாயனம், ஜீவரஸாயனம் முதலிய பல்வேறு விஞ்ஞானங்கள் ஒவ்வொன்றின் வளர்ச்சியும்

இதன் வளர்ச்சியில் பெரிதும் உதவியுள்ளது சென்ற இருநூறுண்டுகளாகப் பல்வேறு விஞ்ஞானத் துறைகளில் திட்ட முடன் பெற்று வந்த பயிற்சியும் ஆராய்ச்சியும் இன்றைய அதன் நிலைக்குக் காரணமாகியுள்ளன என்பதை நாம் மறக்கக்கூடாது ஆயுர்வேதத்தின் நிலை முற்றிலும் வேறுபட்டது. ஆயுர்வேதமோ நியாயம், வைசேஷிகம், ஸாங்கியம் முதலிய பல்வேறு பாரதீய தர்சனங்களின் அடிப்படையில் வளர்ந்த விஞ்ஞானமாகும். நவீன விஞ்ஞானங்கள் அனைத்திலும் ஆராய்ச்சியில் புறச் சாதனங்களே பெரிதும் பயன்படுத்தப் பெறுகின்றன. ஆகவே அவை பாமரர்களுக்கும் புரியும்படியாக (ஃபூல்ப்ரூஃப்) உள்ளன. முயன்றால் யாவரும் அவைகளைப் பரீக்ஷிக்க முடியும். ஆயுர்வேதம் வைசேஷிகம், ஸாங்கியம், நியாயம் முதலிய சாஸ்திரங்களின் தத்துவங்களும் பொருள் விளக்கங்களும் புறச் சாதனங்களால் ஆராயத்தக்கவைகளாக அமைக்கப்பெறவில்லை. இவை அகச் சாதனங்களின் துணைகொண்டே ஆராயப்பெற்று வளர்ந்தவை.

விஞ்ஞானம் அகச்சாதனங்களால் அமைக்கப்பெறுமா? அதை எப்படி நம்புவது என்று ஐயம் எழலாம். பிறவியிலேயே கணித மேதைகளாக விளங்கும் சில அபூர்வப் பிறவிகளைக் காண்கிறோம். 20 – 30 ஸ்தானங்களுள்ள எண்களின் கூட்டல் பெருக்கல் வகுத்தல் போன்ற பல்வேறு கணக்குகளைக் கடிதம் பேனா இவைகளின் உதவியின்றியே மனத்திலேயே கணக்கிட்டுச் சில விநாடிகளுக்குள் அவர்கள் விடையளிப்பதைப் பார்க்கிறோம். மனமும் புத்தியும் இயங்கும் வேகத்தையும் திறனையும் இந்த மேதைகளிடம் பார்க்கிறோம். இவர்களுக்கு உண்மையை அறியப் புறச்சாதனங்கள் தேவைப்படவில்லை. இந்த சக்தி தெய்வ அருள் அல்லது இயற்கையில் ஏற்பட்ட ஏதோ மனச்சக்தி காரணமாக ஏற்பட்டதே தன் முயற்சியால் கிடைத்த சக்தி அல்ல. இந்த சாதாரண சக்தியே இத்தகைய அதிசயத்தை விளைவிக்குமாயின் அகப்பொருளின் விளக்கத்திற்காகவும் தூய்மைக்காகவும் விஞ்ஞான சக்தி வளர்வதற்காகவுமே பல்லாண்டுகள் தவமியற்றிப் பெற்ற அகச்சாதனங்களான மனம் புத்தி ஸ்மிருதி மேதை த்ருதி பிரதிபை முதலிய அரிய புத்திசக்தி களின் உதவியால் மஹர்ஷிகள் புறச்சாதனங்களின் உதவி யின்றியே சில தத்துவங்களைக் கண்டறிந்து அவைகளின் அடிப் படையில் வைத்தியம், சில்பம், தந்திரம் முதலியவைகளை அமைத் துள்ளார்கள். அவர்கள் அமைத்துள்ளவை உண்மையான அடிப்படையில் உள்ளவை என்பதைக் காலமே அத்தாக்ஷியாக நின்று சாக்ஷி கூறுகின்றது. பல்லாயிரக்கணக்கான ஆண்டு ளாகியும் அவர்களது சொல் பொய்க்காமல், மாற்ற வேண்டிய

அவசியமில்லாமல் நிற்கிறதல்லவா? ஸத்யமற்றதன் அடிப்படையில் அமைந்திருந்தால் அழிந்துபட்டிருக்குமல்லவா?

அகச்சாதனங்களின் உதவிகொண்டு உண்மையான விஞ்ஞான அடிப்படையில் ஆயுர்வேதம் அமைந்துள்ளதாகவே கொள்வோம். இன்று அத்தகைய அகச்சாதனங்களை நம்மால் பெற முடியாது. ஆகவே அந்த அகச்சாதனங்கள் கொண்டு கண்டவைகளைப் பகுத்தறிய வழியாது? இன்றைய விஞ்ஞானமளிக்கும் புறச்சாதனங்கள் மஹரிஷிகள் அறிந்த முழு அறிவைப் பகுத்தறியப் பயன்படக்கூடுமா? எவ்வளவு தூரம் பயன்படும்? என்ற ஐயம் எழ இடமிருக்கிறது. இதுதான் நம் முன்னுள்ள பெரும் பிரச்னை. இந்த பிரச்னையை ஸமாளிக்கும் வழியைத் தெரிந்துகொண்டால் ஆயுர்வேத ஆராய்ச்சி நல்ல பலனுள்ளதாக முடிய வழி வகுக்கலாம். மஹரிஷிகள் இந்த விஞ்ஞான ஸாதனையைப் பெற எந்த வழியில் அகச்சாதனங்களைப் பெற்றார்கள் என்று கண்டு அவ்வழியிலே நாமும் செல்வோம் என்று நினைக்கக்கூட இன்று நமக்குத் தெம்பில்லை, கணக்கையும் கணக்கின் விடையையும் காண்கிறோம். கணக்கின் விடை வரக்கூடிய வழி தெரியவில்லை. கணக்கின் விடையில் தவறில்லை என்று அனுபவத்தால் நாம் நம்புகிறோம். ஆகவே எந்த வழியை அனுஸரித்தால் இந்த விடை வருமோ அந்த வழியைக் கண்டு பிடிக்கவேண்டும். அதுதான் நம் முன்னுள்ள பிரச்னை. அந்த வழியைக் கண்டுபிடிக்க நவீன விஞ்ஞானம் பயன்படுமாயின் அதைப் பயன்படுத்திக்கொள்ள நாம் தயங்கவேண்டியதில்லை, இன்று அதைத்தவிர நமக்கு வேறு வழியையும் காணோம்.

ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி என்ற பெயரில் இன்று நடப்பவை அனைத்தும் மருந்துச்சரக்குகள், மருந்துகள் இவைகளைப் பற்றிய ஆராய்ச்சியே. தோஷ தூஷ்யங்களைப்பற்றியோ, ரஸவீர்ய விபாகப் பிரபாவங்களைப்பற்றியோ ஆராய்ச்சி நடைபெறுவதாகத் தெரியவில்லை. இவ்விரு விஷயங்களைப்பற்றிய ஆராய்ச்சியில் நவீன விஞ்ஞானத்தை எப்படிப் பயன்படுத்துவது என்ற விஷயம் ஆயுர்வேத ஆராய்ச்சி நிபுணர்களுக்குத் திட்டமாகப் புரியவில்லை. மருந்துச்சரக்குகள் மருந்துகள் விஷயத்தில் நவீன விஞ்ஞான முறைப்படி செய்து வரும் ஆராய்ச்சியை இங்கும் உபயோகித்துப் பார்க்கிறார்கள். இவைகளிலிருந்து என்னபயன் எதிர்பார்க்கப் பெறுகிறது என்பதை நாம் முன்கூட்டியே தெளிவு படுத்திக் கொள்ளவேண்டும்.

(தொடரும்)

# காமலையில் ச்வாஸ காஸத்திலும் தேவைப்படும் சில ஔஷத யோகங்கள்

சிகித்ஸையில் நல்ல அனுபவமும் நல்ல ஔஷத வகைகளும் வாய்க்கப்பெற்றிருந்தாலும், அபத்தியங்களும் நோய் வரும் வகைகளும் மனிதனின் தேகவாகும் சூழ்நிலையும் மாறிக்கொண்டே வரும் இக்காலத்தில் ஸித்த ஹஸ்தனான வைத்யனும் வித்யார்த்தி நிலையிலேயே இருக்கவேண்டி வருவதில் வியப்பில்லை. சென்ற நூற்றாண்டில் இருந்ததைவிட தற்போது ஔஷத உற்பத்தி சாலைகள் பெருகிவிட்டன. அவைகள் இன்று பெருமளவு தேவையைப் பூர்த்தி செய்கின்றன. ஆனால் அவைகளின் வளர்ச்சி வியாபார நோக்குடன் லாபநஷ்ட அடிப்படையில் கட்டுப்பட்டிருப்பதால் இன்று வைத்யனுக்குப் பூர்ண உதவியும் அளிப்பதாகக் கூறமுடியாது. ஆகவே சில குறிப்பிட்ட மருந்துகளை வைத்யன் இன்றும் தானே தயாரித்துக் கொள்ளவேண்டி வருகிறது. மேலும் சில ஔஷத யோகங்கள் இன்றுள்ள சூழ்நிலையில் உபயோகிக்க முடியாதவை என்ற எண்ணத்துடன் தயாரிக்கப்படுவதில்லை. கபத்தையோ பித்தத்தையோ மேல் நோக்கி வமனமாக வெளிப்படுத்தவோ வயிற்றில் கெல்லல் ஏற்படுத்திக் கீழ் வழியாக வெளிப்படுத்தவோ பயன்தரும் மருந்துகள் இன்று கிடைப்பதில்லை. அதற்குக் காரணம் வமனத்தையோ விரேசனத்தையோ எளிதில் கையாள நோயாளியோ வைத்யரோ தயங்குவதுதான். அதைவிட ஸுலபமாக சரீரத்தை க்லேசப்படுத்திக்கொள்ளாமல் சமன சிகித்ஸை மூலம் நோயின் கடுமையை அடக்கிவிட்டால் போதும்; நோய் தீரவேண்டும் என்ற நிர்பந்தமில்லை என்ற நினைப்பு வேரூன்றிவிட்டதும் ஒரு காரணமாகலாம். ஆகவே வேறுபட்ட நோய் நிலைகளுக்கென தயாரிக்கப்பெற்ற மருந்துகளையே இங்கும் பயன்படுத்தி ஒருவாறு சிகித்ஸையில் வெற்றிபெறவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த சிரமமும் மருந்து உற்பத்திசாலைகள் பெருகப் பெருகத் தீர்ந்துவிடக்கூடும்.

மனிதன் தன் வாழ்க்கை எப்படி அமையவேண்டும் என்று மனக்கோட்டை கட்டுகிறான் அல்லவா? ஆனால் அவன் திட்டங்களும் மனக்கோட்டைகளும் செயலளவில் சாத்தியமானவையா? உருத்தேறுமா என கவலைப்படுவதில்லை. அது போன்று நானும் சில கற்பனைகளில் இறங்குவது உண்டு. ஒரு குறிப்பிட்ட கடின

நோயாளி சிகித்ஸைக்கு வரும்போது இவனுக்கு எத்தகைய குணமுள்ள மருந்து இருந்தால் நல்லது என யோசிக்கும்போது நோய் நிலைக்கேற்ற சரியான ஔஷத யோகம் எது என்று தேடும் படலத்தில் இறங்குவதும் உண்டு. நூல்களில் ஆதாரத்தைக் கண்டுபிடித்துச் சரியான யோகத்தைத் தேடிக் கண்டுபிடித்தாலும் அது செயல் முறையில் செய்ய முடியாததாகவோ பயன்படுத்த முடியாததாகவோ போய்விடும். இருந்தாலும் இந்தக் கற்பனை நடுவே முற்றுப்பெற அனுமதிப்பதில்லை.

காமலையிலும் கக்குவானிருமலிலும் ச்வாஸ காலத்திலும் சில ஔஷத யோகங்களைப்பற்றி இந்தக் கட்டுரையில் குறிப்பிட விரும்புகிறேன், காமலையின் சிகித்ஸை முன்னுளில் சில ரஹஸ்ய யோகங்களுடன் முற்றுப்பெற்றுவிட்டது. காமலையும் வெகு சிலருக்கே வரும். அவர்களும் குடும்பத்தினராலேயே பத்தியத்தாலும் பச்சிலைகளாலும் சிகித்ஸிக்கப்பெறுவர். குணமாகிவிடும். இன்று காமலை தொத்து நோயாகப் பரவுகின்றது. பொதுவாகவும் சூலம், பாண்டு, மலபந்தம், அஜீர்ணம், ஜ்வரம், அதிஸாரம் முதலியவைகளுக்கான சிகித்ஸைகள் முறையற்றுச் செய்யப்படும் போது உபத்திரவமாகவும் ஏற்படுகின்றது. ஆகவே பத்தியமும் பச்சிலையும் போதாத நிலை. ஸித்த மருந்துகளாக உள்ள புனர்னவாஷ்ட கஷாயம், நவாயஸம், காளமேக நவாயஸம், புனர்னவா மண்டூரம், புனர்னவாஸவம் முதலியவை எல்லா நிலைகளிலும் சமாளிக்கப்போதுமானதாகவில்லை. சாகாச்ரித காமலையிலும் கோஷ்டாச்ரித காமலையிலும் உபயாச்ரித காமலையிலும் சிற்சில உபத்ரவங்கள் ஏற்படுகின்றன. அந்த உபத்திரவங்களுக்கேற்ற மருந்துகள் யாவை என்று தேடும்போது ரஸயோக ஸாகரம் எனும் கடலிலிருந்து பொறுக்கி எடுத்த சில யோகங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

காமலாஹர ரஸம் என்றொரு யோகம் ஸித்த யோகஸங்கிரஹத்தில் உண்டு அதன் செய்முறை பின்வருமாறு ; ரஸம் 100 கிராம், கந்தகம் 100 கிராம், திரிபலை 400 கிராம், ஸர்ஜக்ஷாரம் 200 கிராம், யவக்ஷாரம் 200 கிராம், நவச்சாரம் 200 கிராம், இவைகளில் ரஸ கந்தகங்களை கஜ்ஜலி செய்துகொண்டு மற்றவைகளையும் சேர்த்து ஒருநாள் அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். மோருடன் $\frac{1}{4}$-1 கிராம் அளவு வரை நோய் நிலைக்கேற்ப சாப்பிட ஜீர்ண சக்தி அதிகமாகும். அடைபட்ட பித்தத்தை வெளிப்படுத்தும். இது வைத்தியர்களின் பழக்கத்திலுள்ளது.

காமலாந்தகம் - (கபர்தகரஸம்) - இந்தயோகம் வைத்ய சிந்தாமணி, பஸவராஜீயம் இவைகளில் உள்ளது. இதன் செய்முறை பின்வருமாறு - ரஸபஸ்மம் (ரஸஸிந்தூரம்) கந்தகம், ஏலாவாலுகம், வெங்காரம், சீந்திற்கொடி (சீந்தில் சர்க்கரை) விலாமிச்சைவேர், வாஸனேகோஷ்டம், கோரைக்கிழங்கு இவை களைச் சம அளவில் சேர்த்து ஆறுமணி நேரம் இஞ்சிச்சாறு விட்டரைத்து 2 · 3 டெஸிக்ராம் அளவு மாத்திரை செய்து 1 - 2 மாத்திரைகள் ஜீரககஷாயத்தில் சாப்பிடலாம். இம்மருந்தின் குணத்தைப்பற்றி நூல்களில் கூறியுள்ளது - காமலேயில் உள்ள பித்தக்கெடுதி நீங்கும். எரிச்சல் அடங்கும் என்று.

காமலேயைச் சிகித்ஸை செய்யும்போது, உடலில் திடீரென அரிப்பும் இரவு வேளைகளில் தோல்புறத்தில் கடுமையான எரிச்சலும் ஏற்படும். ஸ்நானம் செய்வது கெடுதல் என அதை நிறுத்திவிடும்போது இந்த அரிப்பையும் எரிச்சலேயும் தவிர்க்க நோயாளி ஈரத்துணியை மேல் போர்த்திக்கொள்ளப் பெரிதும் விரும்புவான். சில்லென்றிருக்கும் சிமென்டுத்தரையில் படுப் பான். அவ்விதம் ஏற்படும் வெளி எரிச்சலேக் குறைக்கவும் இந்த முறை பயன்படலாம். வைத்ய சிந்தாமணியிலும் பஸவராஜீயத் திலும் இம்முறை காணப்படுவதால் ஆந்திர தேசத்து வைத்தியர் களுக்கு இதில் அனுபவமிருக்கலாம்.

இதில் உள்ள ஏலாவாலுகம் என்ன சரக்கு என்பதில் ஒரு சந்தேகம் எழக்கூடும். சந்தேகப்பட்ட சரக்குகளில் இதுவும் ஒன்று. பொதுவாக ஏலவாலுகம் முசுமுசுக்கையைக் குறிப்பிடும். அதுவும் எரிச்சலேக் குறைத்துப் புண்ணை ஆற்றக்கூடியதே. பித்தத்தைக் குறைக்கக்கூடியதே ஏலாவாலுகம் என்பதை ஏலா (ஏலரிசி) வாலகம் (வெட்டிவேர்) என்றும் பிரித்து ஏலரிசியையும் வெட்டிவேரையும் உபயோகிக்கலாம். வாலுகம் - கவுளா என்று பொருள் கொள்வதும் உண்டு. எரிச்சலேக் குறைக்க இவை - நன்கு உதவக்கூடியவையே. ரஸயோகஸா கரத்தைத் தொகுத்த ஹரிப்பிரபன்னர் ஏலவாலுகம் என்ற சப்தத்திற்கு கரியபோளம் (கற்றாழைக்கட்டி) என்றும் பொருள் கொள்ளலாம் என்கிறார். ஹிந்தியில் அதற்கு ஏலுவா என்று பெயர். இது நல்ல பித்த விரேசனம். பித்தாசயத்தில் அடை பட்டுத் தேங்கியுள்ள பித்தத்தை வெளிக்கொணர்ந்து மலத்துடன் வெளியேற்றுவதால் உடல் எரிச்சல் குறையவும் காமலேயின் பித்த உபத்திரவங்கள் குறையவும் இதுவும் பயன்படும்.

காமலேயில் கைகண்டதென வைத்தியர்கள் உபயோகிக்கும் ரகசிய மருந்துகளில் கரியபோளமும் ஒன்று. இதை 2 - 3

டெஸிக்ராம் அளவு வாழைப்பழத்தினுள்ளோ பனைவெல்லத்தினுள்ளோ நவீன நாகரிக வைத்யராயின் காப்ஸ்யூலுக்குள்ளோ வைத்துத் தினம் 2 வேளை வீதம் மூன்று தினங்கள் கொடுப்பர். காமலையில் நல்ல குணம் தரும். இதைக்கொடுக்கும் வைத்தியர்கள் பெரும்பாலும் கொத்துக்கடலையை ஒரு இரவு ஊரவைத்து மறுநாள் வேகவைத்து ஜலத்தை இறுத்துச் சிறிது சர்க்கரை சேர்த்து அடிக்கடி சாப்பிடச்சொல்வர். கரியபோளம் வெளிக் கிளப்பியுள்ள பித்தத்தைக் குடலில் அழற்சி ஏற்படுத்தாமல் வெளிப்படுத்த ப்ளாட்டிங் பேப்பர் போன்று உறுஞ்சி வெளிக் கொணரும் தன்மை கொத்துக்கடலைக்கு இருப்பதே இந்த உணவு முறை அமைப்பிற்குக் காரணம். சிறந்த வகையில் கரியபோளமும் கொத்துக்கடலையும் பயனளிப்பதை நான் அடிக்கடி கண்டிருக்கிறேன். ஆகவே ஏலவாலுகம் என்பதற்குக் கரியபோளம் என்ற பொருள் காண்பதில் பலன் அதிகம் என்றே தோன்றுகிறது

காமலாப்பிரணுத்ரஸம் இது பஸவராஜீயம் வைத்ய சிந்தாமணி, ரஸசண்டாம்சு ரஸரத்னமணிமாலா, ரஸரத்நாகரம், ரஸராஜசங்கரம், ரஸகாமதேனு, ரஸராஜஸுந்தரம் முதலிய நூல்களில் காணப்பெறுகின்றது. இதன் செய்முறை பின் வருமாறு – எஃகுத்தூள், ஸ்வர்ணமாக்ஷிகம், காந்தக்கல், அப்பிரகம், தாம்ரம், ரஸம், தாளகம் இவைகளைச் சுத்தம் செய்து அரைத்து தேவதாளிப் பீர்க்கின் சாற்றில் நன்கு அரைத்துக் காய்ந்ததும் குப்பியிலிட்டுச் சீலைசெய்து வாலுகாயந்திரத்தில் 12 மணி நேரம் எரித்து எடுத்து சீந்திற்கொடி, அல்லிக்கிழங்கு, செங்கழனீர் கிழங்கு, திராக்ஷை இவைகளின் கஷாயத்தில் அரைத்து 1 – 2 டெஸிக்ராம் அளவு மாத்திரை யாக்கிக்கொள்ளவும். தேனும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிட்டு மேல் அதிமதுர கஷாயம் சாப்பிடவும், காமலை நோய் நிலை கட்டுக்கடங்கியதும். திரும்ப ரத்தவிருத்தி, உற்சாகம், பலம், புஷ்டிதரச் சிறந்த ஔஷதயோகம் இது. பாண்டுவிலும் மிகவும் ஏற்றது. பாண்டு முற்றி உடலில் பச்சைபடரும் நிலையில் ஹலீமகம் ஏற்பட்டாலும் இது நன்கு பயன்தரும் என ரஸரத்னமணிமாலை கூறுகிறது. ஹலீமக வித்வம்ஸனம் என்ற பெயரிலேயே இது அங்கு கூறப் படுகிறது. ரஸராஜஸுந்தரத்தில் ஸ்வர்ணமாக்ஷிகத்திற்குப் பதில் கந்தகம் சேர்க்கக்கூறப்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது.

ஆரோக்கிய வர்த்தனரஸம் குஷ்டாதிகாரத்திலுள்ள யோகம் ரஸரத்ன ஸமுச்சயம் ரஸசண்டாம்சு முதலிய நூல்களில் காணப் படுகிறது. இதன் செய்முறை பின்வருமாறு – ரஸம் 1, கந்தகம் 1, அயஸ்பஸ்மம் 1, அப்ரகபஸ்மம் 1, தாம்ரபஸ்மம் 1,

திரிபலை 2, சிலாஜது 3, குக்கில் 4, சித்திரமூலப்பட்டை 4, கடுகுரோகிணி 18 என்ற அளவில் சேர்த்து நன்கு முற்றிய வேம்பின் இலை கஷாயத்தில் 2 நாட்கள் அரைத்து 3 - 4 டெஸிக்ராம் அளவு மாத்திரை செய்து கொள்ளவும். இந்த யோகம் குடலிலும் பித்தாசயத்திலும் உள்ள மலம், கபம், பித்தம், கொழுப்பு இவைகளின் அடைப்பைப் போக்கவல்லது, காமலையின் உபத்திரவமாக ஏற்படும் ஜ்வரம், பசியின்மை, அருசி, வயிற்றில் பாரம், மண்ணீரல் கல்லீரல் பருத்திருத்தல் இவைகளில் நல்ல குணம் தருகிறது. ஆனால் வயிற்றில் கெல்லலும் வலியும் சிலசமயம் இதனால் ஏற்பட்டு பெருமலமாக வெளியாகும். இதைத்தாங்க முடியாதவர்களும் உண்டு. மருந்தின் அளவைக் குறைத்தோ, உணவைச் சீரமைத்தோ, அனுபானங்களின் உதவிகொண்டோ இதன் வேகத்தைத் துன்புறுத்தாத வண்ணம் சீரமைத்துக்கொள்ளமுடியும். கிருச்சிரஸாத்யமான பலவியாதிகளில் ஆரோக்யவர்த்தனம் போன்ற மருந்துகளை வைத்யன் உபயோகப்படுத்தி நல்ல அனுபவம் பெறுவதும் அவசியம்.

காஸத்தில் பலவகை. சளி வெளியேறாமல் உடல்குலுங்க விடாதோக இருமச்செய்யும் காசம் – வாதகாசம் பெருத்த உபத்திரவமளிக்கும் வகையைச்சேர்ந்தது. காஸத்துடன் தமகச்வாஸமும் சேரும்போது இதன் வேதனை பொறுக்க முடிவதில்லை, ஆகவே உடன் வேதனைமறையும் ஔஷதங்களை நோயாளி பெரிதும் விரும்புகிறான். அத்தகைய சிகித்ஸை அளிப்பதில் தான் வைத்தியனுக்கும் நல்ல பெயர். உடன் வேதனையைக் குறைப்பதற்கான மருந்துகளில் பெரும்பாலானவை, மயக்கம், தூக்கம், தளர்ச்சி இவைகளைத்தருபவையே அவைகளில் சுவாஸக் குழாய்களில் எதிர்ப்பு இல்லாமல் குழாய்கள் விரிந்து ச்வாஸம் வெளியேற உதவும் மருந்துகளும் அதிகமாகக் கலந்திருக்கும். கபம் எத்தனை அதிகமாக இருந்தாலும் கட்டி இருந்தாலும் அவைகளை வெளிக்கொணர உதவாமலேயே ச்வாஸசிரமத்தை திகையை இம்மருந்துகள் குணப்படுத்துகின்றன. ஆகவே இத்தகைய மருந்துகளுக்கு இன்று நல்ல கிராக்கி மற்றொரு வகை ச்வாஸ காஸம் – உடலில் பலக்குறைவால் – நோய்தடுப்பு சக்திக்குறைவால் எளிதில் சுவாஸப்பாதையிலுள்ள ஜவ்வுகளில் நீர்கோர்த்து விடுகிறது. அது பழுத்து வெளியேறுவதற்குள் கடுமையான மூச்சுமுட்டடல், இருமல் தலைவலி ஏற்பட்டுவிடும். இந்த அலெர்ஜிக் ச்வாஸகாசங்களில் நோய்தடுப்பு சக்தியை வளர்ப்பதற்கு நேரிடையே பயன்படாமல், சீக்கிரமாக நீர்கோர்வை பழுத்து வெளியேறவும் உதவாமல், நீர்கோர்வையை உடன் வற்ற

வைத்து ச்வாஸப்போக்கைத் தடையின்றி சீரமைக்கும் மருந்துகளும் இன்று அதிகப் புழக்கத்தில் உள்ளன. இவை அவசரகால உதவிக்கு மிகவும் இன்றியமையாதவையே.

ஆயினும் இன்றைய நோயாளி நோயாளியாகவே இருந்துவிட விரும்புகிறான்போலும். அவசரகால நெருக்கடி தீர்ந்ததும் நோயே தீர்ந்துவிட்டதாக நினைத்துவிடுகிறான். பின்னர் அவசியம் கவனிக்கவேண்டிய உடல்நிலைச்சீரமைப்பில் அவன் கவனம் செல்வதில்லை. சுவாஸம் விடுவதில் ஏற்படும் சிரமம் நீங்கியதும், இதுவரை சுவாஸம் விடுவதில் சிரமத்தை ஏற்படுத்தி வந்த கபக் கட்டை நீக்கவோ மறுபடியும் சிரமம் ஏற்படாமல் தடுக்கவோ நீர்கோர்வை வராமல் உடலின் பலக்குறைவைப்போக்கி நோய் எதிர்ப்பு சக்தியைப்பெறவோ அவனால் முடிவதில்லை. ஆகவே மார்பகம் ஒரு கபக்குட்டையாகவே நிலைத்து விடுகிறது. நீர்கோர்வையும் மாறாது நிலைத்துவிடுகிறது. ஆக எந்த நிமிஷத்திலும் அவன் நோயை எதிர்பார்த்துத் தயாராக அவசரகால நெருக்கடி தீர உதவும் மருந்துகளைக் கைவசம் வைத்துக்கொள்ளுகிறான்.

ஆயுர்வேதப்படி சிகித்ஸை செய்யும்போது ச்வாஸாசயத்தில் உள்ள கபக்கட்டை நிவிருத்திசெய்ய வமனம் உரிய சிகித்ஸையாகிறது. இன்று வயிற்றிலுள்ள தோஷங்களை நிவிருத்திசெய்யக் கூட வமனம் பயன்படுத்தப்படுவதில்லை. ஸ்டமக்வாஷ் போன்றவையே இன்று உதவுகின்றன. மார்பில் கபக்கட்டு மிகுந்துள்ள நிலையிலும் கபத்தை உறிஞ்சி எடுப்பதுண்டு. கபத்தை இளக்கிச் செதில் செதிளாக வெளியேற்றும் மருந்து முறைகள்கூட, அப்பணியில் வேதனைதரக்கூடியவையாவதால் நோயாளியால் தவிர்க்கப்படுகின்றன. ஆகவே வமனம் வெகுதூரத்திற்கு அப்பாலுள்ளது. இருந்தாலும் பல நாட்கள் இந்த வேதனை நாசினிகளின் உபயோகத்தால் இயற்கைச் செயல்களில் கூட வசமிழந்து ச்வாஸாசயம் கபக்குட்டையாக ஆகி, அம்மருந்துகளும் அதி உபயோகத்தால் பயனற்றுப்போகும்போது எதையாவது செய்யுங்கள் என்று வைத்தியனிடம் சரணடைபவருமிருக்கின்றனர். உடலின் வலுக்குறைவு, பிராண சக்திக்குறைவு, பயம் முதலியவை உடன் நேரிடையாக உத்க்லேசனம் செய்து வமனத்தை உண்டாக்க இடையூறுகளாக இருக்கின்றன. இந்நிலையில் பயன்தரத் தக்கவைகளாக உள்ள யோகங்களைத் தேடும்போது ரஸயோக ஸாகரம் தரும் யோகங்களை அடுத்த இதழில் கவனிப்போம்

———

# கிரஹணீ - தொடர்ச்சி

ஆயுர்வேதாசார்ய B. வைத்யநாதன், சென்னை.

---

இவ்விதம் ஆகாரத்ரவம் வ்யானவாயுவாலும் மற்றும் 'யதாஸ்வபாவத: கானிம்ருணலேஷு பிஸேஷுச | தமனீனும், ததா கானிரஸோ யைரு பசீயதே''. எனக்கசிவாலும் சுக்ரதாது வின் எல்லைவரை ஊடுருவிப் பாய்கிறது. அப்பொழுது அதைப் பக்குவப்படுத்துவது இந்தப் பத்து தமனிகள்தான். ஆகவே இவைகளுக்கும் க்ரஹணீ என்ற விளக்கம் பொருந்தும் நிற்க க்ரஹணீ ரோகத்தில் மிகமுக்யமான பொருளாக உபயோகிக்கப் படுவது மோர். அது ஸ்ரோதச்சோதகம் என்பது தெரிந்ததே. ஆகவே க்ரஹணீ என்பது நாடி தமனீ அல்லது நாடீ வ்யாபாரம் என்ற அபிப்ராயம் ஸமஞ்சஸமாகத் தோன்றுகிறது.

மேற்கூறிய தமனிகள் பல இடத்தும் பரவியிருப்பதால் அவைகள் இருக்குமிடமெல்லாம் கிரஹணீ வியாபாரம் இருக் கிறது என்ருகிறது. எனவே இந்த விளக்கப்படியும் கிரஹணீ என்பது வ்யாபகமானது. குறிப்பிட்ட இடத்தில் மட்டும் நிலை கொண்டுள்ள ஓர் அவயவம் மட்டுமல்ல எனத் தோன்றுகிறது.

இவ்விளக்கங்களைக் கொண்டு "அக்ன்யநிஷ்டாநம் க்ரஹணீ'' அக்னிக்கு ஆதாரம் க்ரஹணீ என்ற கூற்றுக்கு விளக்கம்தர வேண்டுமானல் கிரஹணீ, அக்நி வியாபித்துள்ள ஸர்வ சரீரத் திலும் அமைந்துள்ளது எனச் சொல்ல வேண்டியிருக்கிறது. மேலும் ஆஹாரம் என்ற வார்த்தையையும் ஆமாசயம்,பக்வாசயம் என்பவை போலச் சிறிது வ்யாபகமான பொருள் படும்படி விளக்க வேண்டியிருக்கிறது, ஏனென்ருல் 'தாதவோ ஹி தாத்வாஹாரா' என தாதுக்களே அடுத்தடுத்து தாதுக்களுக்கு ஆஹாரமாகின் றன. அன்னம், பழம், பால் போன்ற ஆஹாரங்களைத் தடுத்து நிறுத்திப் பாகம் செய்ய ஓர் க்ரஹணீ வேண்டுமென்ருல் தாத்வா ஹாரங்களையும் தடுத்து நிறுத்திப் பாகம் செய்ய தாதுக்கள் அள விலும் கிரஹணிகள் மிகமிக அவசியமாகின்றன. 'அந்நஸ்ய க்ர ஹணத் க்ரஹணீமதா' என்று தாத்வன்னத்தை க்ரஹித்துக் கொள்ள கிரஹணீ இன்றியமையாதது, இவ்விதம் க்ரஹணீயின் செய்கை மிக மிக ஸூக்ஷ்மமாக இருப்பதால்தான்.

''ஷட்பி: கேசிதரஹோராத்ரை: இச்சந்தி பரிவர்த்தனம், ஸந்தத்யா போஜ்ய தாதூனும் பரிவிருத்திஸ்துசக்ரவத், போஜ்யே உப யுக்தே ஸதி தாதூநாம் ரஸாதீநாம் சக்ரவத் பரிவ்ருத்திர்

பவதி, சக்ரத்ருஷ்டாந்தேந பரிவ்ருத்தி காலநியமம் தர்சயதி,யதாச சக்ரம் பாநீயோத்தாரணார்த்தம் நியுக்தம் வாஹ்ய மாநம் பாஹுபல ப்ரகர்ஷாத் கதாசிதாச்வேவ பரிவர்த்ததே, கதாசித் பாஹுள பல மாந்த்யாத் சிரேண, ஏவம் தாதவோபி அக்நியாதி ஸௌஷ்டவாத் சீக்ரமேவ பரிவர்த்தந்தே, அக்ந்யாதி வைகுண்யா சிரேண பரி வர்த்தந்தே இதி, ஏவம் ஸுச்ருதேனபி சப்தார்ச்சிர்ஜல ஸந் தான வதனுநா விசேஷணே அனுதாவத்யேவ சரீரம் கேவலம் இத்யத்ர த்ருஷ்டாந்த த்ரயேண ரஸ பரிணாமோபி அக்ந்யாதி பேதேர ப்ரக்ருஷ்டாப்ரக்ருஷ்ட நாலஜ உக்த ஏவ, தத்ரஹி ஜல ஸந்தான த்ருஷ்டாந்தேந சிரேண மாஸ பர்யந்தேந சுக்ர தாபத் தீரஸஸ்யோக்தா ; சப்த ஸந்தான த்ருஷ்டாந்தே நாதி சிராச்ச சுக்ரோத்பக்திருக்தா ; அர்ச்சிஸ் ஸந்தாநத்ருஷ்டாந்தேந த்வதி சீக்ரம் சுக்ரோத்பத்திருக்தா — ச. சி. 15/20—25.

அதாவது அக்நியின் பலாபலம் காரணமாகவும், அடுத்தடுத்த தாதுக்கள் தன்தன் அம்சங்களை எடுத்துக்கொள்வதன் மூலமாக வும் தாது பரிணாமம் துரிதமாகவோ, மந்தமாகவோ ஏற்படலாம் என சக்ரபாணி தத்தர் மிக மிக விரிவாக விளக்கம் தருகிறார். சரகரும்

ரஸ மலாயாந்ந மாசயஸ்த மத : ஸ்திதః |

என ரஸம், மலம், ஆசயம் என்ற பொதுப்படையான வார்த்தை களை உபயோகித்துள்ளார். இதே பொருளில் தான்,

"ப்ரஸாத கிட்டே தாதூனும் பாகாதேவம் த்விதர்த்தத : |

என்ற வாக்கியமும் அமைந்துள்ளது. நிற்க,

"ரக்த ச்லேஷ்மாம பித்தாநாம் பக்வஸ்ய மருதஸ்ததா |
மூத்ரஸ்ய சாச்ரயா : ஸப்த க்ரமாதாசய ஸம்மக்ஞிதா : |
ரக்தஸ்யாத்ய : க்ரமாத்பரே |
கபாமபித்த பக்வாநாம் வாயோர் மூத்ரஸ்ய சக்ரமாத் |
கர்ப்பாசயோஷ்டம ஸ்த்ரீணும் பித்த பக்வாசயாந்தரா |

என ரஸதாது ரக்தத்திற்கும், ரக்ததாது கபத்திற்கும், மாம்ஸ தாது ஆமத்திற்கும் மேதோதாது பித்தத்திற்கும், அஸ்திதாது பக்வத்திற்கும், மஜ்ஜதாது வாயுவிற்கும், சுக்ரதாது மூத்திரத் திற்கும் ஆதாரங்கள் என்றவிளக்கப்படி, ரஸதாதுதான் ரக்தா சயம் (ஆசயம் என்பதற்கு உறைவிடம் எனப்பொருள்), ரக்த தாதுதான் கபாசயம், மாம்ஸதாதுதான் ஆமாசயம், மேதோதாது தான் பித்தாசயம், அஸ்திதாதுதான் பக்வாசயம், மஜ்ஜாதாது வாயுவாசயம், சுக்ரதாதுதான் மூத்ராசயம் என்றுகிறது.

(தொடரும்)

## மஹாமண்டலம் - மதுரை கிளை

---

மதுரைக் கிளையின் மாதாந்தரக் கூட்டம் வைத்ய ஸ்ரீ S. வேலாயுதம் அவர்களின் தலைமையில் 31—12—1972 அன்று நடைபெற்றது. கீழாநெல்லிபற்றி ஸ்ரீ G கிருஷ்ணய்யர் அவர்கள் ஆரம்பித்துவைத்த சர்ச்சையில் ஸ்ரீ S. ஸ்ரீனிவாசய்யர், ஸ்ரீமதி திரிபுரசுந்தரி அம்மாள் (சென்ற இதழில் வெளியான கருசலாங் கண்ணி பற்றிய பாட்டுகளை எழுதியவர் ஸ்ரீ V. K. சேஷாராம் அய்யர், ஸ்ரீ R. ஜேம்ஸ் முதலானோர் கலந்துகொண்டனர். அண்மையில் தேசத்தலைவர் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பெற்றது.

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

**கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.**

---

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHALLA BROTHERS (Regd.)**

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

***K. L. TALWAR & BROS.,***


MUSK MERCHANTS,

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

# இம்ப்காப்ஸ்

## புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில நவீன பாக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

impcops

**உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்**

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

அடையார், சென்னை 20.

**விற்பனை நிலையங்கள்:** 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, ஸொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினல்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.